**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 65/2022** **Date:26.02.2026.**

**(DW1)- ராஜப்பன்**

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் பதிலுரை தாக்கல் செய்வதற்கு முன்பு வாதியின் வழக்கின் விபரமும் எங்கள் குடும்ப சூழ்நிலையும் அறிந்துதான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்கின் வாதிகள் எனது உடன் பிறந்த சகோதரரின் மனைவி மற்றும் குழந்தைகள் என்றால் சரிதான். எனது அம்மா எனக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணத்தில் தனக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ள சங்கதி உண்மைதான் என்றால் சரியல்ல. எனக்கு ராஜம்மாள் என்ற சகோதரி இல்லை என்றால் சரியல்ல, எனது மூத்த அக்கா ஆவார்.

2. எனக்கு ராஜம்மாள் என்ற அக்கா இருக்கும் விபரத்தை எனது எதிருரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாதி வழக்கில் எனக்கு ராஜம்மாள் என்ற அக்கா இருக்கும் விபரத்தை மறைத்து தாக்கல் செய்துள்ளதை நான் எதிர்த்து எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எனது எதிர் வழக்குரையில் குறிப்பிடாத விவரங்களை தான் எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.